உ

திருச்சிற்றம்பலம்.

காழிக் கண்ணுடைய வள்ளலார்

எழுதிய

மாயாப் பிரலாபம்

இது
செந்தமிழ்ச்செல்வியினின்றும்
எடுத்துத் தனியே அச்சிட்டு
வெளியிடப் பெற்றது.

இதன் விலை அணா 2.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

காழிக் கண்ணுடைய வள்ளலார்

அருளிச்செய்த

மாயாப் பிரலாபம் *

காப்பு

மாதங்க வானனனே மாயையா மாதங்கே
போதன் றனையிழந்து போய்ப்புலம்ப—லோதுங்காற்
கூர்த்தபொருட் குற்றமொழிக் குற்றமிவை வாராமற்
காத்தருள்கை யுன்றன் கடன். க

சிறப்புப்பாயிரம்

அகவல்

ஈரே ழுலகி லெண்ணிங் குயிர்க்கும்
போரா வறிவாய்ப் பிரிவற நிறைந்து
காயா திகளாய்த் தனுவொடு கலந்து
மாயா ளென்னும் பேருடை மடந்தை

---

* சிறந்த இந்த சைவசித்தாந்த நூலின் கையெழுத்துச் சுத்தப் பிரதி சீகாழியில் புகழ்படைத்த வணிகராயும் நிலக்கிழவராயு மிருந்த திரு. மாரி முத்தாப்பிள்ளை அவர்களால் எழுதிவைக்கப் பட்டிருந்த தொன்றாகும். பிள்ளை யவர்கள் இன்றைக்கு 54 ஆண்டுகள் முன்வரை காழிக் கண்ணு டைய வள்ளலார் திருமடத்தையும் அதன் அறநிலையங்களையும் செம்மை யாகவும் திருந்திய முறையிலும் பரிபாலித்து வந்தவர்; காழி. சிவ. கண்ணு சாமி பிள்ளை அவர்கள் தாயாரின் மாதாமகர். பிள்ளை யவர்களது கையெ ழுத்துப் பிரதியைப் பார்த்து இது வித்வசிகாமணி. ப. அ. முத்துத் தாண்டவராய பிள்ளை அவர்களால் படியெடுக்கப்பட்டு இச் "செல்வி யின் வாயிலாக முதன்முதல் வெளியிடப்படுகிறது.

மழைக்கா லிருளை வெளியென மயக்கித்
தழைத்தபல் லுயிர்க்கிரு டாளுய் நிற்பவள்
அன்னை யிருண்மலி யாணவ மாகவும்
முன்னவ டிரோத மொய்குழ லாகவும்
நல்லுயி ரிச்சா ஞானங் கிரியை
தொல்லிரு வினைகளைத் தோழிய ராகவும்
சுத்த மாயையைக் கைத்தா யாகவும்
புத்திரர் பொறிபுலன் கரண மாகவும்
போதன் றன்னைப் புருட ளுகவும்
தீதற வுடைய மோகினித் தெரிவை
ஈங்குவ ளொருவன் றன்னு லின்புறு
பாங்குடைப் போதனைப் பறிகொடுத் தழிந்து
போதன் போதையைப் பொருந்துதல் கண்டு
போதமின் மாயாள் புலம்ப றன்னைச்
சாயா வுண்மைத் தபோதனர் கேட்க
மாயாப்ர லாப மெனவகுத் துரைத்தோன்
கெடிலப் புனல்சூ ழதிகைக் கதிபன்
ஆழிமேன் மிதந்த காழிமூ தூரான்
திசைமிகு கீர்த்திக் குகமடத் தலைவன்
கருநெறி கழிக்குந் திருநெறித் தேசிகன்
அத்தனைக் காட்டி யமுதுவாழ் வித்த
வித்தகன் றனக்கு வேலைக் காரன்
சிற்குணன் றன்னைச் சேர்ந்தவர்க் கருளும்
நற்கண் ணுடைத்திரு ஞானசம் பந்தன்
திருமலி யின்பச் சிவனடித் தொண்டர்தம்
பெருமைய ரடிபுனை பெற்றி யோனே.

அவையடக்கம்

சொல்லுரிமைத் தூய்மையிலா நானுந் துணிபொருடான்
வல்லவர்கள் போனால் வகுத்திடுத—லல்லலற
விப்பாரிற் ளூேன்று மிரவியெதிர் மின்மினிநின்
றெப்பாக மின்னுவ போலும். க

குருவணக்கம்

காயா திகள்கழியக் காதலித்த மாதவர்க்கு
மாயாப்ர லாப மெனவகுத்துத்—தூயபுகழ்ச்
சண்பையில்வாழ் சம்பந்தன்ருள் வணங்கிச் சாற்றுவே
னெண்பதுவெண் பாவாக யான். ௨

நூல்

சீராட்டி யென்பேர்முன் செப்பாத போதனெனைப்
பாராட்டி யென்பேர் பகர்ந்ததற்பி—னோராநான்
றுஞ்சினு லன்ருேவிச் சொல்லுரைப்பா னென்றுள்ள
மஞ்சினா னின்றே னற. ௩

அங்கே யுடம்புக் குடம்பாகி யன்றளவு
மெங்கேயென் ருலிங்கே யென்றெங்கும்—பங்கறவே
நின்றவெனை யன்றியொரு நேரிழையொன் றுண்டாகி
னன்றுநமக் கீதோர் நகை. ௪

சாராத சிற்பாவை தன்வாழ்வே மெய்யென்று
வாராது வந்தவனோர் வார்த்தைசொலப்—பாராது
போவதே யென்வாழ்வு தானடங்கப் பொய்வாழ்வே
யாவதே சாந்தம் பரம். ௫

வாழாத வாழ்வும் பெருவாழ்வும் வாழ்வேனைப்
பாழாக ஞானப்பெண் பண்ணுவதென்—கேள்வாநா
னுன்னைவெறுக் கும்படியே யுற்றதல்லோ வுன்போத
மென்னை வெறுப்பதனு லென். ௬

சற்ருேநீ வாழ்ந்தபடி சார்போதா வென்னுடைய
சுற்றமொழித் தென்னைத் துறந்ததற்பின்—பெற்றபய
னூண்டா னிறப்பா யுலகத்தோர் தூடணப்பூண்
பூண்டாயென் பெற்ருய் புகல். ௭

சந்தமிலி யென்றன்னைத் தானறிவா னுந்தன்னை
யந்தமிலா நானிங் கறியேனு—மிந்தக்
குலாவெவளோ கூறினுள் போதாநீ கூறல்
விலாவொடியக் கண்டாய் மிக. ௮

புக்கபடி கேளீரென் போத னிருதலையு
மொக்கநடை செய்தே யொழுகினன்—சக்களத்தி
முற்றுந் தனதாக்கி யென்வார்த்தை முன்மொழியச்
சற்றும் பொறுத்திலனே தான். கூ

புல்லியெனைத் தானடங்க நானுகும் போதனுட
னெல்லையிலா நட்பின் றிழந்தேனே—சொல்லாற்
றுறப்பிலியென் றென்னைத் தூற்றலுறு வானோர்
பிறப்பிலி வந்ததற்குப் பின். ய

எட்டனையுந் தன்னெதிர்நா னில்லாவென் கற்பொழித்து
வெட்டவெளிக் கேதள்ளி விட்டானே—கெட்டே
னிறவாவென் கற்பை யிழித்தொருவன் வாக்காற்
பிறவாத சொற்பிறந்த பின். கக

மேலீடெல் லாமொழிந்து வேறாகி யின்றொருவன்
காலீடு பட்டுக் கலங்கினேன்—மாலறவே
விட்டானோ போதனெனை மெய்யரிவை கண்மாய
மிட்டாளோ கேட்டே னிது. கஉ

நல்லாங்கு செய்தேனை ஞானப்பெண் ணென்றொருத்தி
பொல்லாங்கு சொல்லப் புகுந்தாளே—யெல்லாமுங்
கேள்விக்கே கேட்டாய் கெடுப்பாரைப் போலுன்னை
வாழ்வித்தே னித்தனைநாண் மற்று. கங

செய்யானோ வின்றிவனுஞ் செப்புவே னெப்படிதான்
பொய்யாவே னானோ புரிந்தக்கா—லையாகோ
ஞான வரிவையுட னட்பெனக்கு மக்களுக்குஞ்
சூனியமே செய்தான் றுணிந்து. கச

போதிக்கி லன்றி யுணராத போதாவுன்
னேதிக்குப் பாத்திரமாய் நின்றேனே—யேதென்று
சொல்லுகே னுன்சடமா நீசுத்தா சுத்தனும்
வெல்லுமா றேதுனை நான்மேல். கரு

எட்டா நிலத்திலே நின்றாலு மென்போதா
விட்டேனோ வுன்னையவன் மேலுறினு—மொட்டேனு
னுன்னையோ நின் றநிலை யுன்னுதொறும் யான்வருவே
னென்னுணை யென்னுவ தென். கசா

ஊரொழித்தா னல்ல வுறவொழித்தா னூரும்
வேரொழித்தா னென்மேல் விருப்பொழித்தான்—பேரொழித்தா
னின்றநிலை தானொழிய நின்றொழித்தா னீதெல்லா
மொன்றுமிலான் கற்பனைதா னே. கஎ

முன்னாக்கி நில்லாதே முத்திகெட மற்றவனைப்
பின்னாக்கி நின்றாற் பிழையேனோ—வென்னளவி
னீந்தவொண்ணா நேசமுநீ நீந்திப்போய் நீபெற்ற
வேந்திழையால் வாழாத யான். கஅ

சொல்லாத சொல்லொருவன் சொல்லுதலு மக்கணமே
செல்லா விடத்திலிவன் சென்றானே—யெல்லாமு
நானென்றா னப்பொழுதே நான்கெட்டே னன்கெட்ட
னானென்றான் கெட்டான் றனை. கசு

ஓட்டமற நிற்றலற வொன்றுமற வென்னையவன்
றேட்டமற வைத்தொருவன் செய்ததற்பின்—கூட்டமற
மெய்ஞ்ஞானப் பெண்ணவனை மேலிட்டாள் கீழிட்டே
னெஞ்ஞான்று காண்பேனி யான். உ0

நீபோனா லென்பெறுவாய் நிற்றியே னிந்தித்துச்
சீபோவென் றுன்னருகு சேராள்காண்—பேயேபோற்
செல்லுவளுன் செய்கையறிற் சேராமற் சேரினுனைக்
கொல்லுவள்காண் ஞானக் கொடி. உக

போக்கொழிந்தென் பெற்றதவ டன்னானீ போதாவென்
வாக்குமன மாக்கிய மக்களையு—நீக்கியெனைத்
தள்ளி யுருவழிந்து தானழிந்தாயோ கேட்டே
னுள்ளதொழிந் துண்டோ வுனக்கு. உஉ

நானிலா வாணவமா நற்றாயே யுற்றதிரோ
தானமா மென்னுயிராந் தவ்வையே—போனான்விட்
டேழையே னின்னிலையே நின்றே னிருவினையாந்
தோழிகாள் சொல்லீர் துணிந்து. உங

பேசுதொறும் பேசுதொறு மென்றெனக்குப் பித்தாகி
யாசறவென் மேல்வைத்த வாராத—நேசமெலாம்
விட்டோசஞ் செய்தவளால் வேறா யெனைமறந்த
நிட்டூரா வாழ்ந்துபோ நீ. உச

எண்ணீறி லாதபெரு வாழ்வுடையே னின்றிவளாற்
கண்ணீறு பட்டுக் கலங்கினேன்—பண்ணுதலைக்
கல்லாத நிட்டூரி கண்கொடியாள் பார்த்திடநா
னெல்லாம்போய் யாவதென் னின்று. உரு

கூசாமன் மெய்யுடையார் போலொருகோ லஞ்சமைந்த
வாசானய் வந்த வரும்பாவி—பேசாதென்
மாயைக் குலமாய்க்க மாச்சரியங் கொண்டுவந்த
தாயத்தா னேவறியேன் றான். உசு

தாயிருக்க நானிருக்கத் தப்பிடமே தெவ்விடத்து
நீயிருக்க நானகன்று நிற்பேனே—நேயமதற்
கானு வறிவான வான்மாவே நீதீரப்
போனலன் றேபிழைப்பாய் போய். உஎ

இன்றை யிவடன்னுற் குணவரையா யென்போத
னென்றளவுண் டன்றளவு மின்றளவாத்—தொன்றுதொட்டு
வந்தவெனை வேம்பாகத் தான்மதித்தான் மற்றவன்றன்
சத்த மிருந்தவா தான். உஅ

இன்றையிவ ளின்றையிவண் ஞானப்பெண் ணென்றென்னை
யென்றுமலர் தூற்ற வியல்போதா—னன்றே
பொருந்தினவ ளுனேயுன் பொய்வாழ்வால் வாழா
திருந்தவளே காணுன்பெண் ணே. உகூ

பொய்யாவே னுனேதான் போதையே மெய்யாவாள்
செய்யாச் செயலிவனே செய்யுமவ—னேயோநீ
மெய்யரிவை யுன்வாழ்வை மெய்யென்று கொள்ளாத
பையலுனைப் பின்பாரான் பார். ௩௰

ஆராத போத னறுதிநமக் காமென்று
போராசை மேன்மேற் பெருக்காதே—தீர
விளையாள்கே ளுன்னையவ னேறவிண்ணி லேற்றி
விளையாட்டுக் காண்பான்காண் மேல். ௩௧

ஆர்பா னிலையுடையை யான்மாவே யுன்னைநான்
சார்போத னென்றவட்குச் சாற்றேனே—சீர்போகச்
செய்தாளாய் வாழுமருட் சேயிழையை நீமுடிவி
லெய்தா வகையாக யான். ௩௨

என்னைமறந் தாலுமுன்னை யென்னுயிரா மன்னைவிடா
ளென்னைவிடி லங்கோசா னப்பொழுதே—யுன்னை
யிருவரும்விட் டாலன்றே நீயவள்பா லெய்தி
யொருவடிவ மாவா யுரை. ௩௩

சார்ந்தவிட மெவ்விடத்துந் தன்கருமப் போதனுடன்
சேர்ந்தவர்தா மென்பெறுவர் செப்புங்காற்—கூர்ந்து
செறிவாரை வாழ்விப்பான் போலவவன் செய்கை
யறியாளோ கெட்டே னவள். ௩௪

பொய்யாம லாறைந்து புத்திரரைப் பெற்றேனை
மெய்யாக வென்போதன் விட்டானே—யையோவென்
பற்றான சேய்களைப்பின் றான்மறந்தும் பார்க்கிலனே
சிற்பாவை தன்னுடனே சேர்ந்து. ௩௫

என்றேறப் பார்த்திட்டா னென்னையவ னவ்வளவி
லன்றே நிலைகுலைந்தே னஞ்சினேன்—னின்றெனது
பிள்ளைகளை வேறாகப் பேசினா னேசமற
வுள்ளபடி யென்றே யுணர்ந்து. ௩௬

மிக்ககடைப் புதல்வர் வேறாமுன் றாதைதனைச்
சிக்கெனவே நீதழுவச் செல்வாயோ—வொக்கவிவன்
பாழிலே நின்றவருட் பாவையார் தாம்வாழும்
வாழ்வெலா நானேகாண் மற்று. ௩௭

அன்னை யெனவறியா வப்பேயுன் னப்பனையிங்
கென்னோ டிளகுவிக்க வெய்தாயோ—தன்னுடனா
னென்றவொரு தென்றானை யொன்றுவியாய் தீயேயோ
வின்றிவட்டான் வாழா திட. ௩௮

பேதமறுங் காற்புதல்வா பேதமிலுன் றாதையாஞ்
சேதனனை யென்பாற் செலுத்தாயோ—போதத்
தடங்கிடுமுன் றாதையெனக் காயிடவான் பிள்ளா
யிடங்கொடுப்பான் செல்லா யினி. ௩௯

சுத்தபோ தன்றன்னைச் சோத்திரமே யுன்னுடைய
சத்தமே யாக்காய் சலியாதே—யொத்தணையு
மெய்யே பரிசத்தில் வீழ்த்தாய் விழியுருவிற்
செய்யா யவனாகச் சென்று. ௪௰

23084

சத்தமெனும் பிள்ளாய்நீ சார்போத னுங்கவனே
யொத்த செவியதனி லுய்த்துவிடாய்—மெய்த்தும்
பரிசமே தொக்கதனிற் பாய்ச்சாய் விழியி
லுருவே கலக்கச்செ யுற்று. சக

உற்றதுதா னுவா னுன்னப்ப னீரதமே
பற்றருசி சிங்குவையிற் பற்றுவியாய்—முற்றுங்
கிராணமதில் வீழக் கிடத்துகந்த மேநீ
பிராணவுயிர்த் தாரையன்றோ பேசு. சஉ

என்பாணி யேயெங்கு மேற்பியா யீனமலம்
வன்பாய நீவழங்கி வாதியாய்—துன்பான
வானந்த மேவடிவ மாக்குபத்த மேயவனே
ஞானம்போ லேவாழ நான். சங

எச்சமிலா மானதமே பற்றுவியா யென்புத்தி
நிச்சயமே பண்ணுவிக்க நீநடவா—யச்சமறக்
கொண்டெழுப்பா யாங்காரஞ் சித்தமே கொண்டவெல்லா
முண்டாகச் சிந்திப்பி யுற்று. சச

விச்சையே நானவன்பான் மெய்யாக நல்கறிவை
யிச்சைய ராகம்பெருக வெய்திடா—யெச்சாயோ
வீங்கேவா ராய்புருடா வெப்போது மென்னையவ
னீங்காமற் கொண்டுதிரி நீ. சரு

காலமா மூவகையாங் காலையரே முன்புபோ
லேலவே யெல்லை யலம்புதுமை—யேலவே
பண்ணுவீர் போய்நியதி நிச்சயிக்கப் பண்ணுவியாய்
நண்ணுகலை யுன்றொழிலே நாடு. சசு

பொன்னு வுடம்புகர ணம்புவனம் போக
மொன்று முயிரா முறவொழிந்து—நின்றேனைத்
தானான போதனருட் டையலைமுன் சார்ந்ததற்பி
னானு விதமானே னான். சஎ

வித்தையே யீசுரமே மேலச்சா தாக்கியமே
சத்திசிவ மேநீர் சடமாகி—மித்தையற
நின்றேனைச் சேட்டித்து நின்றவிளைப் பாறவினி
யொன்றீர் குடிலையிலே யுற்று. சஅ

நானேபின் கக்கினசோ றுய்விடுவேன் ஞானமோ
வானுத வின்னமுத மாயிடுவா—டானு
யறியாத போதாமுன் னுனைத வைந்து
பொறியாயி தென்னே புகல். சகூ

இச்சாஞா னங்கிரியை யென்னுமுயிர்த் தோழிமீர்
சிச்சிநீர் மீளீர்போய்ச் சேயிழையீ—ரெச்சா
பவன்சிறிதும் பாரானன் பற்ருர்பின் பற்றிச்
சவங்குவதே நாமெல்லாந் தான். ருய

அன்னையெனு மாணவமே யற்றவுயிர்த் தோழியா
முன்னை யிருவினையா மொய்குழலீ—ரென்னுரிமை
யாளனுடன் மெய்யரிவை யன்பானு ளங்கவடான்
மீளவிடாண் மீளீர் விரைந்து. ருக

என்னை யழகாக வின்றளவு மொப்பித்தே
மன்னவனும் போதனுடன் வாழ்வித்தே—னன்னையெனு
யோவாத வாணவத்தாட் குற்றதிரோ தான
மாவாளே கெட்டே னற. ருஉ

தள்ளியெனைக் கைவிட்டுச் சத்தியப்பெண் டன்னுடனே
யுள்ள படியா யுருவழிந்தா—யெள்ளளவுஞ்
சார்வற்றுய் தாரணியோர் தம்வாக்காற் பேயென்னும்
பேர்பெற்று யென்பெற்றுய் பின். ருங

சத்த முதலாய தத்துவங்கா ளையோபோ
மித்தனைபே ருக்கொருவ னெட்டானே—வத்தனையோ
வென்றனைநே ரானபடி யெல்லீரு மொய்த்திரோ
நன்றுநமக் கீதோர் நகை. ருச

எல்லீரும் பற்றி யெறும்பிடைநாங் கூழ்போலென்
னில்லானைச் சென்றெரிக்க வெய்திரோ—புல்லிப்
பெறுமாபோற் சேதனன்பாற் பெண்பிள்ளை வாழு
மிறுமாப் பெலாம்போக வே. ருரு

மெய்யரிவை வாழ்வொழிய வேறறியான் போதனினி
யையவத்தை நாம்பட்டா லாம்பயனென்—செய்யுநெறி
கேளீ ரவனுசை கெட்டுவிடும் புத்திரரே
மீளீ ருயிர்த்தோழி மீர். ருசா

ஆணவமா மன்னையே யான்மாவா மென்றணைவன்
காணவே வேண்டாமற் கைகழன்றுன்—வீணுக்கு
மாயவினி வேண்டாநாம் வாரீரோ வாழாப்பெண்
டாயுடனே யல்லவே தான். ருஎ

கற்றவெலா நீமறந்து வெற்றுடம்பாய்க் கற்பனையொன்
றற்றவெறும் பாழை யறிந்தழிந்து—பற்றொழிக்குஞ்
சிற்பாவை தன்னுடனே சேர்ந்துபெறுப் பேறெல்லாம்
பெற்றாயோ போதாநீ பின். ருஅ

நான்பெற்ற பேறுகாண் ஞானமே நீபெறுவாய்
தான்கெட்டு நின்ற தனிப்புதல்வ—னுன்கட்டுங்
கட்டெலா நீக்கியெனைக் கைகழன்றாற் போலுனையும்
விட்டெலா மாவான் விதி. ருகூ

ஆமாறு நின்றவிரு ளன்னையே நீங்காமற்
றீமாயை யென்றென்னைத் தான்செலுத்து—மாமாயைக்
கைத்தாயே நல்லவளங் காணச்சேர் மூவருநா
மொத்தோமின் றொன்றாயி னோம். சூ௰

பொய்யடங்கச் சொல்லிப் புதியாரைப் போற்பழைய
வையகத்துக் காகாமல் வந்தவிவன்—மெய்யுறவா
யித்தனை நாள்வந்த வெனக்குமிவர்க் குஞ்சன்ம
சத்துருவே காணுமிவன் றான். சூக

அறியாமை யென்போமோ வாங்கறிவென் போமோ
வறியா வறிவுதா னாகிச்—செறிவொழியத்
தன்செய்தி யொன்றுமிலா வொன்றான தன்மையனை
யென்சொல்லி வாழ்த்துகோம் யாம். சூஉ

உற்றபெருங் கேடு கெடுவா யுருவழிவாய்
வெற்றவெறும் பாழாவா யென்றழன்று—சொற்றவெலாந்
தன்பேரிற் றிட்டென்று தாங்காம லித்தனையு
மென்பேரென் றானே யிவன். சூ௩

எத்தனையும் யானென்றா லென்போதன் புண்ணுறுவே
லொத்தலறி நின்றுதறி யொன்றானே—யித்தனையு
மெய்ம்மாது பண்ணுவித்த வித்தார வல்லபமோ
வெம்மாய மென்றறியேன் யான். சூச

என்கா ரியமடங்கப் பொய்யாமா மின்றிளையா
டன்கா ரியக்கேடு சத்தியமா—நின்காதல்
சந்தமலி வேதகத்தாற் சார்போதா நீபகர்ந்த
விந்தவுரைக் கென்னியம்பு கேன். சூரு

இன்பமே யாமவள்பா லெய்திலெமை யெய்துங்காற்
றுன்பமே யாமென்னத் தான்சொல்லி—யன்பாள
னுண்ணெகிழ்ந்து போதையுட னொத்திரண்டுங் கெட்டவனை
யெண்ணுநமக் கென்கா ரியம். சூசூ

போனான் பரதேசம் போதையுட னென்போத
னாத வின்பவுரு வாகித்தான்—றானா
யொழிந்தோ வொழிவறநின் றொன்றாகி யுற்றுற்
றழிந்தோ வுறுப்பறையா னான். ௬௭

என்பாலா மின்ப மெடுத்துரைப்பை யார்க்குமவ
டன்பாலா மின்பொருகாற் சாற்றாயோ—வன்பாகத்
தீதொன்றும் வாராமற் செய்தநான் பட்டபா
டேதென்று சொல்வா யினி. ௬௮

ஓரிடத்தா னென்றவனோ டொன்றவோ வொன்றிலவன்
பேரிடத்தா னென்றவனைப் பின்செலவோ—தீர்விடத்திற்
கொண்டதுகொள் ளானுடனே கூட்டற்ற நட்பையெலாங்
கொண்டவர்தா னென்பெறநீ கூறு. ௬௯

உன்வாழ்விற் கண்ணீர் சொரியவுரோ மஞ்சிலிர்ப்ப
தென்வாழ்விற் கண்டறியே னீதுரையா—யுன்வாழ்வைத்
தீர்த்தபோ தந்திர வென்னுடனே கூடியுனைப்
பார்த்தபோ துள்ள பயம். ௭௰

நேராத நானழிந்து நீக்கம் பொருதவளாய்ச்
சாராத சார்வாகிச் சார்வுதொறு—மோருயிராய்த்
தன்னளவி னானிருக்கத் தான்போய்க் கணிகையர்போ
லென்னளவி லாயினா ளின்று. ௭௧

உருவாதி நால்வகைக்கு மோர்முதலாய் வாழ்வு
தருவானென் போதனவன் றன்னை—யொருவன்
றமராகு நானென்று சாற்றியிட வென்னோ
டமராநட் பானா னவன். ௭௨

என்னளவி லென்போதா விப்போது நீர்க்கிடையு
மன்னிடமா மங்கணத்தி லாழ்புழுவும்—பின்னமற
மோதலைநீர் சேர்முளரிப் பத்திரமு மோரினவ
நீதமும்போ லாவதே நீ. ௭௩

என்னை யறியாமை யென்றறிந்து மின்பிலியென்
றன்னை யறிந்தகன்று முற்றதுகே—ளுன்னறிவி
லன்பைத்தா னுங்கழற்றி நம்போத னாராப்பே
ரின்பத்தாள் கைப்படவோ வின்று. ௭௪

இன்பத்தாள் கேளாயிங் கேனை யிருவருக்கும
பின்பற்றாற் போலுனையும் பின்பாரா—னன்பாளன்
புல்விகடந் தந்தத்தே போய்விடுவன் முன்புபோ
லெல்லையிடப் பட்டவனோ வின்று. ௭௫

என்னபிழை சொல்வோ மிருவர்க்கு மின்றளவாய்
மன்னு பதியாகி வந்ததுபோ—யுன்னையும்விட்
டெண்ணாதே யானந்த னென்பானுக் கெல்லையறப்
பெண்ணான னென்னவன் பின். எசு

ஆணுமலை பெண்ணுமலை யன்றிவனை யென்றொருவன்
காணவெளி யேவந்து கட்டுரைத்தான்—வாணுதல்கே
ளப்பொழுதே யென்னோடு வாழ்வொழிந்தா னந்தவுரை
தப்பா திருப்பதே தான். எஎ

என்னை யிருவரும்விட் டிங்ககன்றோ மின்பத்தா
டன்னோடு தன்னுறுதி தற்போதன்—முன்னை
யிருவருமொன் றாயே யிருப்பதலா லுண்மைக்
கிருவரு மில்லை யினி. எஅ

அற்றநிலை யாணவமா மன்னையே தவ்வையா
முற்றதிரோ தான வுறுதுணையே—முற்றுமது
சங்கேத நாணமெலாம் போதனெனைத் தள்ளிவிட
வங்கேபோய் விட்டா னகன்று. எகூ

மெய்ம்மையெனும் பேர்பெற்ற மெல்லியலே யின்றுநாம்
பொய்ம்மையற வொன்றாகிப் போயிழந்தோ—நம்மிடத்தே
நண்ணியவ னீயென்று நானென்றும் வேறாகப்
பண்ணியதென் றுளவோ பார். அ0

நானெங்கே நீயெங்கே ஞானமே நம்போதன்
றானெங்கே மேல்கீ ழறத்ததும்பி—யானந்தம்
பேராதே பேதமாம் பெத்தக் கரையிடித்திட்
டோராறே யொத்தா லுரை. அக

தண்காழிச் சம்பந்தன் றண்டைத்தா ளின்பயனைக்
கண்காள் பருகிக் களியீரோ—நண்பாக
வந்தவிருண் மாயையார் வாழ்வையொழித் தப்பொழுதே
தந்திடுமே பேரானந் தம். அஉ

மெய்யே மனிதரைப்போன் மேதினியில் வந்தொருவன்
செய்யாது செய்தானென் செப்புகேன்—வையக்
கருவழிய நானழியக் கற்பழியப் போத
னுருவழியப் பார்த்தானே யுற்று.

மாயாப்பிராலபம் முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

காழிக்கண்ணுடைய வள்ளலார் கமலபதம் வாழ்க.

23084

The Imperial Printing Works, Madras.